**கோ.ம.சா.2– இளையாழ்வார் L.A.O.P.No. 437/2022** 06.04.2026.

**2 முதல் 5 கோருரிமையாளர்கள் தரப்பு குறுக்கு விசாரணை –**

எனது தந்தை மன்னார்சாமியின் முதல் மனைவி ஆண்டாளம்மாள் காலமான பின்னர் எனது தாயார் எத்துராஜம்மாளை இரண்டாவதாக திருமணம் முடித்து கொண்டார் என்றால் சரிதான். எத்திராஜம்மாள், மன்னார்சாமி தம்பதியினரின் மகன்கள் ராகவராமானுஜம், கேசவன், ஆதிலட்சுமி, இளையாழ்வார், கோவிந்தராஜ், ஜெயராமன் மற்றும் கண்ணன் இந்த 7 பேரும் மேற்படியாரின் பிள்ளைகள் என்றால் சரிதான். எனது தாத்தா வெங்கடசாமி நாயக்கர் காலமாவதற்கு முன்பு எந்தவிதமான விருப்புறுதி ஆவணம் எதுவும் எழுதி வைக்கவில்லை என்றால் சரிதான். வெங்கடசாமி நாயக்கர் சொத்தை பொறுத்து, ஆண்டாளம்மாள், எத்திராஜம்மாள் ஆகியோர்களுக்கு தலா 2ல் ஒரு பங்கு என்றால் இல்லை. நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் தபசில் சொத்து எனது தந்தை மன்னார்சாமி நாயக்கருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். சர்வே எண்.164/1 நிலமானது ஆதியில் எனது தாயாரை பெற்ற தந்தை வெங்கடசாமி நாயக்கருக்கு பாத்தியப்பட்ட சொத்தா என்றால் இல்லை. எனது தந்தைக்கு பாத்தியப்பட்ட சொத்து ஆகும். எனது தந்தைக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் எனது தந்தை தபசில் கண்ட சொத்தை கிரையம் வாங்கினார். எனது தந்தை, எனது தாயாரை திருமணம் செய்வதற்கு முன்பு கிரையம் பெற்றாரா அல்லது திருமணம் செய்த பின்பு கிரையம் பெற்றாரா என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. எனது தந்தை மன்னார்சாமி நாயக்கரின் பூர்வீக கிராமம் தூத்துக்குடி மாவட்டம், சங்கரலிங்கபுரம் கிராமம் என்றால் இல்லை. இ.குமாரலிங்கபுரம் கிராமம்தான் பூர்வீக கிராமம் ஆகும். எனது தந்தை இந்த தபசில் கண்ட சொத்தை கிரையம் வாங்கியதற்கான கிரையம் பத்திரம் எங்கு உள்ளது என்றால் பெட்டியில் இருந்தது, கரையான் தின்றுவிட்டது. கரையான் அசல் பத்திரத்தை தின்றுவிட்டது என்றாலும், அந்த

பத்திரத்திற்கான எஸ்.ஆர்.ஓ நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால் இனிமேல்தான் அந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். நான் சொல்வது போல் கிரையம் பத்திரம் உள்ளது என்றால் நீதிமன்றத்தில் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. தபசில் கண்ட சொத்தானது தாயாரை பெற்ற தந்தையான வெங்கடசாமி நாயக்கருக்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்து என்றும், எனது தந்தையால் கிரையம் செய்யப்பட்டதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** –இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்காள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
ஸ்ரீவில்லிபுத்தூர்.